கும்பகோணம் பரஸ்பர சகாய நிதி (KMBF) நிறுவனம்

சட்டரீதியாகச் செயல்படுவதை தமிழ்நாடு அரசு உறுதி செய்திட வேண்டும்!

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்தல்

சென்னை, அக்.4- இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின், தமிழ்நாடு மாநில செயற்குழு சார்பில் இது குறித்து, விடப்பட்டுள்ள ஊடகங்களுக்கான செய்தி வருமாறு:-

தஞ்சை மாவட்டம், கும்பகோணம் மாநகரை தலைமை இடமாகக் கொண்டு செயல்பட்டு வரும் கும்பகோணம் பரஸ்பர சகாய நிதி (KMBF) நிறுவனம் கடந்த 1903 முதல் இயங்கி வரும் 123 ஆண்டு கால பாரம்பரியம் கொண்ட தனியார் நிதி நிறுவனம் ஆகும்.

நாடு முழுவதும் 156 கிளைகள் உள்ளன. 12 லட்சத்திற்கும் மேற்பட்ட முதலீட்டாளர்கள் இந்நிறுவனத்தில் பங்குகளை வைத்துள்ளனர்.

1,500க்கும் மேற்பட்ட ஊழியர்கள் இந்நிறுவனத்தில் பணியாற்றுகின்றனர்.

இயக்குநர் குழுத் தேர்தலில் தற்போதைய நிர்வாகம் மீண்டும் வெற்றி பெற்றதாக தேர்தல் முடிவுகள் வெளியாகியுள்ள நிலையில், சில சக்திகள் சட்டம் ஒழுங்கு பிரச்சினைகளை உருவாக்குவது கவலையளிக்கிறது.

ஜனநாயக முறையில் புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட அந்நிதி நிறுவனத்தின் தலைவர்,செயலாளர் மற்றும் இயக்குநர்கள் சட்டப்பூர்வமாக செயல்படுவது உறுதி செய்யப்பட வேண்டும்.

அரசியல் வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்டு, புதிய நிர்வாகிகளின் பணி தொடர்ந்து நடைபெற தமிழ்நாடு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தேர்வு செய்யப்பட்டுள்ள நிர்வாகிகள் மீது வழக்குகள் பதிந்து கைது செய்து அச்சுறுத்தும் நடவடிக்கைகளில் காவல்துறை ஈடுபடக் கூடாது. அதிகார அத்துமீறல்களுக்கு சிறிதும் அனுமதி அளிக்கக்கூடாது.

கும்பகோணம் மாநகரில் செயல்பட்டு வரும் மத்திய அலுவலகம் மற்றும் நிறுவனத்தின் ஊழியர்களின் பாதுகாப்பு உறுதி படுத்தப்பட வேண்டும்.நிறுவனத்தின் நன்மதிப்பு பாதுகாக்கப்பட வேண்டும்.

பங்குதாரர்கள் மற்றும் உறுப்பினர்களின் முதலீடுகள், உரிமைகள், நலன்கள் பாதுகாக்கப்பட வேண்டும். நிர்வாக முடிவுகள் அனைத்தும் சட்டம் மற்றும் நிறுவன விதிகளுக்கு உட்பட்டே மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதை உறுதி செய்திட முன்வர வேண்டும் என தமிழ்நாடு அரசை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியன் தமழ்நாடு மாநில செயற்குழு வலியுறுத்துகிறது.

இவ்வாறு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் மு.வீரபாண்டியன் தெரிவித்துள்ளார்.

வணிகர்கள் நாம் நன்றி உணர்வுடன் துணை நிற்போம்!

மதுராந்தகம் - தாராபுரம் தொகுதிகளில் உதயசூரியனுக்கு வாக்களிப்பீர்!

வணிகர்களுக்கு தி.மு.க. வர்த்தகர் அணி சேப்பாக்கம் வி.பி. மணி வேண்டுகோள்!



சென்னை, அக்.4- வணிகர்களுக்கு வரிச்சலுகைகளையும், நலத்திட்டங்களையும் வாரி வழங்கி, வணிகர்களின் வாழ்வாதாரத்தை தொடர்ந்து பாதுகாத்தவர் "திராவிட மாடல் நாயகர்" முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் கரத்தை வலுப்படுத்திட..! இடைத்தேர்தல் பெருவெற்றிக்கு எடை போடத் தெரிந்த வணிகர்கள் நாம் நன்றி உணர்வுடன் துணை நிற்போம் என்று கழக வர்த்தகர் அணி துணைச் செயலாளர் சேப் பாக்கம் வி.பி. மணி தெரிவத்துள்ளார்.

இது குறித்து அவரது அறிக்கை வருமாறு:

நடைபெற உள்ள மதுராந்தகம், தாராபுரம் சட்ட மன்ற தொகுதிக்கு உட்பட்ட வணிக வள்ளல்களுக்கு பணிவான வணக்கம்.!!

மேற்கண்ட தொகுதிகளில் வரும் 6 ஆம் தேதி சட்டமன்ற இடைத்தேர்தல் நடைபெற உள்ளது.

இந்த இடைத்தேர்தலில் அரசு இயங்க அச்சாணிகளாய் விளங்கும் வணிகப் பெருமக்களுக்கு வரிச் சலுகைகளையும், நலத்திட்டங்களையும் வாரி வழங்கி, வணிகர் நல வாரியம் அமைத்துத் தந்து, நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்வதற்கு முன்பாக வணிகர்களை அழைத்துப் பேசி, அதன் அடிப்படையில் பட்ஜெட்டில் பல்வேறு வாரிச் சலுகைகளை அளித்து, முத்தாய்ப்பாக குடும்ப நலநிதி உதவித்தொகை 5 லட்சமாக உயர்த்தி வழங்கி, வணிகர்களை தொடர்ந்து பாதுகாத்து வருபவர் "வணிகர்களின் பாதுகாவலர்கள்" தலைவர் கலைஞர் அவர்களும், இன்றைய "திராவிட மாடல் நாயகர்" முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களும் ஆவார்கள் என்பதை இத்தருணத்தில் நாங்கள் நன்றி உணர்வுடன் நினைவு கூற கடமைப்பட்டுள்ளோம்.!!

தற்போதைய அசாதாரண சூழ்நிலையில் தனது ஆட்சிக்கு பெரும்பான்மை இல்லாத த.வெ.க அரசு தற்பொழுது கொல்லைப் புற வாசல் வழியாக அ.தி.மு.க. சட்டமன்ற சில உறுப்பினர்களை தேவைக்கேற்ப அவ்வப்பொழுது விலைக்கு வாங்கி, அவர்களை குறுகிய நாட்களில் ராஜினாமா செய்ய வைத்து, தனது கட்சியில் இணைத்து செயற்கை முறையில் இடைத்தேர்தலை உருவாக்கி, அதிலும் குறிப்பாக இன்று வணிகர்களுக்கு பல்வேறு இன்னல்கள் ஏற்படுவதற்கு முழுமையான காரணமாக இருப்பவர் தான் இன்றைய முதல்வர் நடிகர் விஜய் அவர்கள்.

தமிழ்நாட்டில் செயற்கை முறையில் நடைபெறும் இந்த இடைத்தேர்தல்கள் இனிமேலும் தொடராமல் இருக்க...

எடை போடத் தெரிந்த "வாக்காள வணிக வள்ளல்கள்" தாங்கள் வாக்குகளை நன்றி உணர்வுடன் உதயசூரியன் சின்னத்திற்கு குடும்பத்துடன் வாக்களிப்பதுடன், உங்கள் வாடிக்கையாளர்களாகிய பொதுமக்களிடத்திலும் தி.மு.கழக அரசு தனது பொற்கால ஆட்சிக் காலத்தில் மக்களுக்கும் வணிகர்களுக்கும் கடந்த காலங்களில் செய்த சரித்திர சாதனைகளை வாய்ப்பு கிடைக்கும் பொழுதெல்லாம் மறவாமல் மக்களிடம் எடுத்துக் கூறி,

அதிலும் முக்கியமாக இன்றைய அத்தியாவசிய பொருள்களின் கடும் விலை வாசி உயர்வுக்கு பெரிதும் காரணமாக உள்ள சிறிதும் நிர்வாக திறமையற்ற நடிகர் விஜய் அரசின் தொடர் தவறுகளையும் இத்தருணத்தில் மறவாமல் மக்களிடம் சுட்டிக்காட்டி,

மதுராந்தகம் மற்றும் தாராபுரம் கழக வேட்பாளர்கள் இ. பரந்தாமன் மற்றும் எஸ். சுகன்யா ஆகியோர்களின் பெரு வெற்றிக்கு, எடைபோடத் தெரிந்த வணிகர்கள் பெரிதும் துணை நிற்குமாறும் மிகவும் பணிவுடன் வேண்டுகிறோம்.!

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



விழுப்புரம் மத்திய மாவட்ட கழக பொறுப்பாளரும், சட்டமன்ற உறுப்பினருமான டாக்டர் இரா.இலட்சுமணன் விழுப்புரம், முகாம் அலுவலகத்தில், மகாத்மா காந்தி அவர்களின் 157வது பிறந்தநாளில் அவருடைய திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து, மலர் தூவி மரியாதை செலுத்தினார். உடன் விழுப்புரம் கிழக்கு நகர கழக பொறுப்பாளர் எஸ்.வெற்றிவேல், தலைமை பொதுக்குழு உறுப்பினர் TNJ.சம்பத் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

வாலாஜாபாத் தி.கிருஷ்ணராஜ்
அக்டோபர் 4 (2014)



வாலாஜாபாத் ஒன்றியக் கழக பொறுப்பாளராக 1988 முதல் 1992 வரை நான்கு ஆண்டுகள் அதன்பின்னர் 1992 முதல் 2008ம் ஆண்டுவரை ஒன்றிய செயலாளராக தொடர்ந்து பணியாற்றியவர்.

தொடர்ந்து 20 ஆண்டு காலம் வாலாஜாபாத் ஒன்றிய கழக வளர்ச்சிக்குப் பாடுபட்டவர்.

கழகம் அறிவித்த அனைத்து அறப்போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

செய்யறிவு உலகில் செம்மொழித் தமிழ்!

'கணையாழி' தலையங்கம்!

செய்யறிவு!
மனித குலத்திற்கு
மற்றுமொரு புது நெருப்பு!

இந்த நூற்றாண்டிற்குக் கிடைத்த
இன்னொரு மின்சாரம்!

முன்னாள் முதல்வர் சொல்வதைப் போல
உலகை ஆட்கொள்ளப் போகிறது இணையம்!

காலத்தின் தேவையைக் கண்டறிந்த கலைஞர்
99ஆம் ஆண்டிலே
தமிழ் இணைய மாநாட்டைத்
தமிழ்நாட்டில் நடத்தினார்.

தமிழ் இணையக் கல்விக் கழகம்,
விசைப்பலகை 99,
ஒருங்குறியில் (யூனிகோடில்) தமிழ்...
செம்மொழி மாநாட்டில்
தமிழ் இணைய மாநாடு என்று
முன்னத்தி ஏர் பிடித்தவர் கலைஞர்!

அடுத்ததாக, இணையத்தில் தமிழின்
இடத்தை உறுதி செய்தது
முன்னாள் முதல்வர் 2024இல்
நடத்திய பன்னாட்டுத் தமிழ்க் கணினி மாநாடு!

இப்போது,
"செய்யறிவு உலகில்
செம்மொழித் தமிழும் தமிழரும்"!
கனடாடொராண்டோவில்
அக்டோபர் 15முதல் 18வரை
உலகத் தமிழ் ஆய்வு மாநாடு!

தமிழ் மொழி
தொடர்புக் கருவி மட்டுமில்லை;
ஒரு இனத்தின் வாழ்வகம்!
அறிவுக் களஞ்சியம்!
தலைமுறைகள் கைமாற்றும்
பண்பாட்டு மரபு.
காலத்தின் தேவைக்கு ஏற்பப்
புதுப்பித்துக்கொள்ளாத மொழி
எதிர்காலத்தை இழக்கும்!

இன்றைய உலகம்
செயற்கை நுண்ணறிவு எனும்
புதிய அறிவுப் புரட்சியின்
விளிம்பில் நிற்கிறது.
மனிதர்களைப் போல பேசிய கருவிகள்
இப்போது
மனிதர்களோடு பேசுகின்றன!
உரையாடுகின்றன!

மனிதர்களைவிட விரைவாகக்
கவிதை, கட்டுரை, கதைகளைத் தருகின்றன.
ஓவியங்கள் வரைகின்றன!
பாடுகின்றன!
இசையமைக்கின்றன!

கேள்விக்கு உள்ளாகியிருப்பது
மனிதர்களின் இருப்பு மட்டுமில்லை;
கடவுள்களின் இருப்பும் கூட!

இந்தப் புதிய உலகில்
எங்கே நிற்கிறது தமிழ்?
எவ்வாறு நிற்க வேண்டும் தமிழர்?
விடை தேடும் களமாகக்
கனடா உலகத் தமிழ் மாநாடு!

"செய்யறிவு உலகில்
செம்மொழித் தமிழும் தமிழரும்'
காலத்தின் குரல்!
காதல் மொழியாக,
பக்தி மொழியாக,
ஆட்சிமொழியாக,
வணிக மொழியாக மட்டும்
இனி இருக்காமல்
தமிழ்
தொழில்நுட்ப மொழியாக வேண்டும்!
அதற்குச்
செய்யறிவுக்குத் தமிழறிவைச்
சேர்க்க வேண்டும்!
அதற்கு முதல் கட்டமாகச்
செய்யறிவைச் சேர்க்க வேண்டும்
தமிழர்களுக்கு!
அது செய்யறிவை உருவாக்கும்



தமிழறிவாக வேண்டும்.
தமிழ்
சுவடி, அச்சு, கணினியில் வந்து,
மின்னுலகில் நுழைந்து,
காட்சி உலகில் விரிந்தது!
இப்போது இணையத்தில் வந்து
எல்லைகளை உடைக்கிறது!

மேலும்
தயாராகிக்கொண்டிருக்கிறது
தமிழ்
காலத்தின் தேவைக்கு!
இப்போது தமிழ் உலக மொழி!!

வாழும் தலைமுறைக்கும்
வரும் தலைமுறைகளுக்கும்
பாலமாக இருக்கிறது செய்யறிவு!

பன்மொழிச் சூழலில்
திசைகளின் திகைப்பில்
இன்னும்
ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின்பும்
தமிழ்ப் பயிர் வளரக்
கனடா மாநாடு!

இது
உலகத் தமிழுக்கான
ஓர் அறிவுப் பாலம்!
தமிழின் பெருமை
கடந்த காலத்தில்!
தமிழின் எதிர்காலம்
நமது கைகளில்!
இன்றைய பெருமை,
"தமிழ்
உலகின் தொன்மையான செம்மொழி".
கூடுதலாக வேண்டும்
"தமிழ்
உலகின் நவீன அறிவு மொழி!"
செம்மொழி என்ற பெருமை
கலைஞர் காலத்தில் கிடைத்தது!
அவர் எடுத்த
முயற்சிகளின் தொடர்ச்சியாக,
செய்யறிவு மொழி என்ற பெருமையை
அடைய,
செய்யறிவுக்குத் தமிழறிவைச்
சேர்க்கக் கூடுகிறது
கனடா மாநாடு!

தமிழ்
கடந்த காலத்தின்
நினைவகம் மட்டுமில்லை
அது
எதிர்கால அறிவுக்குத்
திறவுகோலாகட்டும்!

ஆம்!
செய்யறிவோடு சேர்ந்து
மனித குலத்திற்குத்
தமிழ்
மற்றுமொரு புது நெருப்பாகட்டும்!

-நன்றி
'கணையாழி'
அக்டோபர் - 2026



ம.ரா.